**றுவான்புற அதிவேகபாதை செயற்திட்டம் - 2018**

றுவான்புற அதிவேகபாதை செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. நாட்டின் தந்திரோபாய மற்றும் சமூக நிலைமையை முன்னேற்றுவதற்காக தெற்கு அதிவேக பாதை மற்றும் மத்திய அதிவேக பாதைக்கும் இடையில் புதிய அதிவேக பாதையை நிர்மாணிப்பது செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரான நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும்.

நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. பௌதீக முன்னேற்றம்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

04 பகுதிகளின் கீழான பெல்மடுல்ல வரையான தெற்கு அதிவேகப்பாதையின் றுவன்புர தொடக்கம் கஹதுடுவ வரையான பரிமாற்றலின் 73.90 கிலோமீற்றர்களின் நிர்மான வேலைகள் மீதான முன்மொழிவுகள் 2016 ஓகஸ்ட் 23 இல் அமைச்சரவை அமைச்சர்களினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தை குழு நெடுஞ்சாலையின் பகுதி – 01 ற்கான நிதி முன்மொழிவினை மதிப்பீடு செய்வதற்கான விபரமான பொறியியலாளர் மதிப்பீட்டினை வழங்குவதற்காக 2018 நவம்பர் 28 இல் கோரிக்கை ஒன்றினை

செய்திருந்ததுடன் அதனுடய ஒப்பந்ததாரரை தெரிவு செய்தல் மற்றும் நிதி ஏற்பாடுகளை செய்வதன் தாமதத்தினால் அவ்வாறான மதிப்பீடுகள் எதுவும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிவேகப்பாதையின் நிர்மானத்தின் மீது ரூபா 394.29 மில்லியன் கிரயத்தில் சாத்தியவள கற்கையை செய்வதற்கான ஆலோசனை சேவையை வழங்குவதற்காக 2014 நவம்பர் 10 இல் அதன் துணைக்கம்பனியுடன் ஒப்பந்தம் ஒன்றில் ஈடுபட்டிருந்தது. ஒப்பந்தமானது அளவியல், புலன்விசாரனை, ஆரம்பகட்ட வடிவமைப்பு, சமூக மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீடு மற்றும் மீளவழங்கள் நடவடிக்கைகள் போன்ற சேவைகளை வழங்குவதனை உள்ளடக்குகின்றது.<br>சாத்தியவள கற்கைகள் மீதான அறிக்கையினை 2017 ஜூலை 03 இல் பூர்த்தியாக்க வேண்டியிருப்பினும் அவ்வாறான எவ்வித அறிக்கைகளும் 2018 திசெம்பர 31 இல் உள்ளவாறு கூட சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சாத்தியவள கற்கை அறிக்கைகளின் தாமதத்தினால் செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்படும். | சாத்தியவள கற்கைகள் மீதான அறிக்கைகள் மற்றும் ஆரம்பகட்ட வடிவமைப்புக்கள் என்பன 2019 சனவரியில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. | தாமதத்திங்கான காரணங்கள் புலன்விசாரனை செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 11.53 மில்லியன் கிரயத்தில் ஒப்பந்ததாரரினால் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருந்த அதிவேகப்பாதையின் நிர்மானத்தின் மீதான நீரியல் கற்கைக்கான ஒப்பந்தமானது இலங்கை காணி அபிவிருத்தி | சிவில் வேலைகளின் ஆரம்பிப்பில் தாமதத்திற்கான சாத்தியப்பாடு. | அவதானிப்புடன் உடன்பாடு. இருப்பினும், தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் அடிப்படை விடயங்கள் இயக்கப்பட்டதன் | கூட்டுத்தாபனத்துடன் ஒரு முறையான உடன்படிக்கையுடன் ஈடுபடல் வேண்டும். |

| | |
|---|---|
| கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 66.44 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், கூட்டுத்தாபனத்துடன் முறையான உடன்படிக்கையில் கையொப்பமிடப்பட்டிருக்கவுமில்லை அக்கற்கைகள் 2019 நவம்பர் 30 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருக்கவுமில்லை. | காரணமாக ஈஐஏ அறிக்கை 2019 ஓகஸ்ட் 31 இல் உள்ளவாறு கூட பெறப்பட முடியாமல் இருந்ததாக இது விபரமாக திருத்தியமைக்கப்படல் வேண்டும். |

**2.3 காணி சுவீகரிப்பின் மீதான விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 108 அரச காணித்துண்டுகள் உள்ளடங்களாக 701 காணித்துண்டுகள் கககதுடுவ தொடக்கம் இங்கிரிய வரையான அதிவேகப்பாதையின் பகுதி - I இன் கீழ் சுவீகரிக்க பட்டியலிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் 2016 நவம்பர் 01 இல் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும் இழப்பீட்டு கொடுப்பனவுகள் மீது நிதி உடன்படிக்கை செய்யப்பட்டிறாததனால் காணி சுவீகரிப்பு மீதான செயற்பாடுகள் தாமதமாக காணப்பட்டன. | இழப்பீட்டு கொடுப்பனவுகளை கொடுத்து தீர்ப்பதில் தாமதத்தின் மீது வட்டிச் செலவு ஏற்படுவதற்கான சாத்தியம். | அரச வர்த்தமானி அறிவிப்பில் பிரசுரிப்பதற்காக செயற்திட்டத்தினால் தயாரிக்கப்பட்டு 2017 மார்ச் 01 இல் வரிசை அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்ட இழப்பீட்டு திட்டம் பிரசுரம் செய்திருக்கப்பட்டிருக்கவில்லை. | காணி சுவீகரிப்பின் அமுல்படுத்தல் செயற்பாடானது துரிதப்படுத்தப்படல் வேண்டும். |

**2.4 சுற்றுச்சூழல் விடயங்கள் மீதான விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 1980 ஆம் ஆண்டில் 47 ஆம் இலக்க தேசிய சுற்றுக்சூழல் சட்டத்தின் பிரகாரம், மத்திய | காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்படுவதற்கான | தற்போது, உரிய சுவட்டின் அளவை வேலைகள் | தாமதத்திற்கான காரணங்கள் அடயாளப்படுத்தப்பட வேண்டியதுடன் |

| | | | |
|---|---|---|---|
| சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றுச்சூழல் விளைவு மதிப்பீட்டு அறிக்கை செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் பெறப்படல் வேண்டும். செயற்திட்டமானது ஆரம்பகட்ட வடிவமைப்புக்களின் தயாரிப்பு மற்றும் காணி சுவீகரிப்பு மற்றும் பலவற்றின் மீதான நடவடிக்கைகளை ஆரம்பித்து 2018 மார்ச்சில் அது தொடர்பான தகவல்களை மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு சமர்ப்பித்திருப்பினும் கூட, உரிய அறிக்கையானது 2019 நவம்பர் 30 இல் உள்ளவாறு கூட பெறப்பட்டிருக்கவில்லை. | சாத்தியம். | பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. | அறிக்கையினை விரைவுபடுத்த தொடர்புடைய தரப்பினருடன் கலந்துரையாடப்படலும் வேண்டும். |

## 2.5 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் துரிதமாக செயற்படாமல் இருந்தபோதும், செயற்திட்ட கண்கானிப்பு பிரிவானது 05 மோட்டார் வாகனங்களை வாடகைக் கெடுத்திருந்ததுடன் ஒரு வருடத்திற்கான உடன்பட்ட குறைந்தபட்ச ஓட்டுதல் இயளவிற்கான தூரத்திற்கு கூட பயன்படுத்தப்படாது மீளாய்வாண்டின் போது 8.81 மில்லியன் தொகையான வாடகை கொடுப்பனவினையும் செலுத்தியிருந்தது. | செயற்திட்ட கண்காணிப்பு செலவுகள் தேவையற்றவிதத்தில் அதிகரிக்கக்கூடும். | பதிலளித்திருக்கவில்லை. | மோட்டார் வாகன பயன்பாட்டின் உண்மை தேவையானது அடயாளப்படுத்தல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட கண்காணிப்பு பிரிவானது 2017 ஏப்ரல் 05 முதல் ஒரு சமூக மற்றும் சுற்றாடல் இணக்கப்பாட்டு உத்தியோகத்தர் மற்றும் காணி | சுற்றறிக்கை நிபந்தனைகள் உடன்படவில்லை. | இவ் ஆலோசகர்கள் 2017 ஏப்ரல் 01 இல் செயற்திட்ட பணிப்பாளரினால் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | சுற்றறிக்கை நிபந்தனைகளை கடைப்பிடிக்க நடவடிக்கை எடுக்கப்படல் |

சுவீகரிப்பு உத்தியோகத்தர் போன்றவர்களை வேலைக்கமர்த்தி இருந்தது, இது முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் 2016 சனவரி 15 ஆம் திகதிய டிஎம்எஸ்/7777/ஆர்இபி ஆம் இலக்க கடிதம் மற்றும் 2016 மார்ச் 24 ம் திகதிய 01/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பிரிவு 2.2.8 இன் கீழான ஏற்பாடுகள் என்பவற்றுடன் முரனாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேலும், 2018 திசெம்பர் 31 வரை ரூபா 1.59 மில்லியன் தொகையான கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன.

வேண்டும்.